1973 மார்ச் 2]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஆந்திராவிலே தரமான பட்டுகள் எல்லாம் மலிவான விலையிலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே மாதிரி நம்முடைய மாநிலத்திலே மலிவான விலையிலே அது கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை நம்முடைய இலாகா மூலமாக அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஆந்திராவில் எப்பொழுது இவ்வாறு செய்ய முயற்சித்தார்களோ அப்பொழுது நமது மாநிலத்திலே முயற்சிக்காமல் விட்டுவிட்டார்கள். ஆதலால், ஆந்திராவைப் போன்று குறைந்த விலையில் விற்கும் முயற்சியை இப்பொழுது நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

*215 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ல் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள கதர் பட்டு உற்பத்தி செய்யப் பட்டது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 1971-72-ம் ஆண்டில் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ரூபாய் 64,99,047 மதிப்புள்ள கதர் பட்டு உற்பத்தி செய்துள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: துணைத் தலைவர் அவர்களே, இங்கே நாமே உற்பத்தி செய்வதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோவை மாவட்டத்திலே ஏராளமான விவசாயிகள் பட்டுநூல் பூச்சி வளர்ப்புக்கு ஏற்பாடுகள் செய்து, முசுக் கொட்டை தழைகளை விவசாயம் செய்கிறார்கள். அதற்கு அரசாங்கம் ஊக்கம் அளித்து அங்கு நூல் வாங்குகிற எம்போரியம் கொண்டுவர அரசு முயலுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: முன்னமேயே அதைத்தான் சொன்னேன். ஒரு இண்டஸ்ட்ரி கொண்டுவர வேண்டுமென்றால், அதற்குத் தேவையான பட்டுப் பூச்சிக்கு இடம் வேண்டியிருக்கிறது. இப்பொழுதிருக்கிற இரண்டொரு இடங்கள் போதவில்லை யென்ற காரணத்தால், அதை அதிகமாக உற்பத்தி செய்ய, விரிவுபடுத்த முயற்சி செய்யப்படுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. எம். தேவராசன்: கடலூர் தாலுகாவில், மசனகுடி சில்க் பார்ம் இருக்கிறது. அது நல்லமுறையில் செயல்படுகிறதா? அதில் எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, வங்காளத்தில் தயாரிக்கப்படுகிற கதர்ப்பட்டு புடவைகள் தரமாக உள்ளன என்று கூறப்படுகிறது. குறைந்த விலையில் கிடைப்பதாகவும் சொல்லப்படுகிறது. இங்கு நமக்கு நல்ல லாபம் வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, மற்ற மாநிலங்களோடு போட்டியிடுகின்ற முறையிலே குறைந்த விலையில், தரத்தை உயர்த்தி விற்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பட்டுப்புடவையில் தரம் என்று சொன்னால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் சிறந்த தரம் இருக்கிறது. அது கைத்தறியாக இருந்தாலும் சரி, கதராக இருந்தாலும் சரி. குறைந்த விலையிலே தயார் செய்கின்ற நிலையிலேதான் மற்ற மாநிலங்களிலே தயாரிக்கிறார்கள். இருந்தாலும் தரத்தை, விலையை வைத்து எடை பார்த்தால், நம்முடையதுதான் உயர்ந்த தரமுள்ளது, விலையும் குறைந்தது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சித்தலவாடி கிராம பின்தங்கிய வகுப்பு மக்களுக்கு வீட்டு மனைகள்

* 216 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், சித்தலவாடி கிராமத்திலுள்ள வெட்டுக்கட்டிப் பகுதியில் வசிக்கும் பின்தங்கிய மக்களுக்கு வீட்டுமனை வழங்க நிலம் கையகப் படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.